## குடிநீர்

### (இனம் - 11)

01. தேவைத் திட்டத்தில் ஊரகக் குடிநீர்த் திட்டம் முன்னுரிமை பெற்றதொரு திட்டமாக விளங்குகிறது. தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் அவதியுறும் தமிழகத்தில், ஊரகக் குடிநீர் வழங்கு திட்டமானது மாநில அரசின் முன்னுரிமை அடிப்படையிலான பணிகளில் ஒன்றாகும். தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டம் 1994 – இல், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றுக்கு குளிப்பதற்கும் துவைப்பதற்கும் தேவையான நீரைப் பெறுவதற்கான நீராதாரங்களை உருவாக்க வழக்கத்திற்கு மாறாகத் தக்க அதிகாரம் (பிரிவு 110 ஜி) வழங்கப்பட்டுள்ளது. ஆனால் குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி பராமரிப்பதற்கான திட்டவட்டமான அதிகாரங்கள் வழங்கப்பெறவில்லை. மேலும் இச்சட்டம், வேளாண்மை அல்லாத பிற பயன் பாடுகளுக்கு, நீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் ஆகியன உள்ளிட்ட பொதுப் பயன் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்வதனையும் தடை செய்கிறது. (பிரிவு 111 மற்றும் 115) . வெளி நிதியுதவி, மைய அரசின் நிதியுதவி, வறட்சி நிவாரணப் பணிகள் ஆகியவற்றின் கீழ் ஊரகக் குடிநீர் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (த.கு.வ.வா) மேற்கொண்டு வருகிறது. இதுவரை ஊராட்சி அமைப்புகள், கிராமக் குடிநீர் திட்டங்களை செயல்படுத்துவதில் நேரடியாக ஈடுபடுத்தபடவில்லை. அவை மாவட்ட ஆட்சித்தலைவர்களின் மேற்பார்வையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொறியியல் கூட்டுறவு இணையம் (Encofed), தனியார் முகமைகள் மூலமே நேரடியாக செயல்படுத்தப்படுகின்றன. எங்கும் பரந்து நிற்கும் அமைப்பினைக் கொண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அலுவலர்கள் குடிநீர் ஆதாரங்களை இனங்கண்டறிவதுடன் குடிநீர்த் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தியும் வருகின்றனர். (ஆழ்குழாய்க் கிணறுகளை நிறுவுதல், முழுமையான குடிநீர்த் திட்டங்களை அமைத்தல்) 1982 ஆம் ஆண்டு முதல், கையிறைப்பான், மின் இறைப்பான் திட்டங்களைப் பராமரிக்கும் பணி ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு மாற்றப்பட்டது. மாவட்ட நிலையிலான தொழில்நுட்பப் பிரிவு (Technical Cell) கையிறைப்பான், மின் இறைப்பான் திட்டங்களைப் பராமரிக்கத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை வழங்குகிறது. இத்தொழில் நுட்பப் பிரிவில் தொழில் நுட்ப அலுவலர்கள் பொதுவாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து மாற்றுப் பணி அடிப்படையில் (Deputation ) பெறப்படுகின்றனர். மற்றவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்படுகின்றனர். ஊராட்சி மன்றங்கள், ஊராட்சிகளின் தேவைகளை மட்டுமே நிறைவு செய்யும் கையிறைப்பான், மின் இறைப்பான்களைப் பராமரிக்கின்றன. கூட்டமைவுக் குடிநீர்த் திட்டங்கள் பொதுவாகத் தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

02. குடிநீர் வழங்கும் செயல்பாடாவது, குறிப்பான நான்கு வகைச் செயல்பாடுகளைக் கொண்டதாகும். அவை யாவன; அ) குடிநீர் ஆதாரங்களை இனங்கண்டறிதல், உருவாக்கல் அதனை செயற்படுத்துதல். ஆ) குடிநீர் ஆதாரங்களைப் பராமரித்தல். இ) ஊரகக் குடிநீர்த் திட்டங்களை நடை முறைப்படுத்துதலைக் கண்காணித்தல்; மேலும் ஈ) பயனாளர்களிடமிருந்து குடிநீர்க் கட்டணங்களை வசூலித்தல். ஊராட்சிகள், இச்செயல்பாடுகளில் பிற அமைப்புகளைக் காட்டிலும் சிறந்த அனுபவப் பழக்க அறிவு பெற்றுள்ளன. ஊராட்சிகளுக்கு மட்டுமேயான குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரை, அத்தகைய திட்டங்களை இனங்கண்டறிந்து உருவாக்கிப் பராமரிப்பதாவது ஊராட்சிகளுக்கு எளிதாகும். மேலும், ஊரிலுள்ள வீடுகளிலிருந்து குடிநீர்க் கட்டணங்களை வசூலிப்பதற்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கபெறலாம். அத்தகைய ஆதாரங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்கு பயன்படுவதாக அமையும்போது திட்டங்களைச் செயற்படுத்துதல், கண்காணித்தல் உள்ளிட்ட அத்தகைய செயற்பாடுகள் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பாகும். அத்தகைய ஆதாரங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியதாக அமையும்போது, பெரிய குடிநீர்த் திட்டங்களில் மாவட்ட ஊராட்சி (District Panchayat)) நீராதாராங்களை இனங்கண்டறிந்து, உருவாக்குவதோடல்லாமல், திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்திடத் தேவையான நிதியினைத் திரட்டுவதிலும் முக்கிய பங்காற்ற வேண்டியிருக்கும். குடிநீர்த் திட்டம் ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குப் பயனளிப்பதாக அமையும்போது, அத்தகைய திட்டங்களை உருவாக்கி, செயற்படுத்தி, பராமரிக்கும் பணியினை மேற்கொள்ளத்தக்க முகமையாக மாநில அளவிலான தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியம் போன்ற அமைப்புகள் அமைவனவாகும். பராமரிப்புப் பணியினை ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள்/ மாவட்ட ஊராட்சிகள் மேற்கொண்டிருப்பினும் நீர்கட்டணம் வசூலிப்பதனை ஊராட்சிகளே ஏற்கவேண்டும். ஊராட்சி ஒன்றியம் / மாவட்ட ஊராட்சிகளால் பராமரிக்கப்படும் திட்டங்களைப் பொறுத்து குடிநீர்க் கட்டணத்தில் உரிய விகிதாச்சார அடிப்படையில் அவற்றுக்குச் செலுத்த வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தல், கண்காணித்தல், பராமரித்தல் ஆகியவற்றுக்குத் தேவையான தொழில்நுட்ப அலுவலர்களை மாற்றுப்பணி அடிப்படையில் அனுப்பக் கருதப்பட்டுள்ளது. அனைத்துக் குடிநீர் ஆதாரங்களும் முழுமையாக ஊராட்சி அமைப்புகளால் பராமரிக்கப்பட வேண்டுவது இன்றியமையாததாகும் எனக் கருதப்படுகின்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தொழில்நுட்பப் பிரிவு, மாவட்ட ஊராட்சியின் மேற்பார்வை கட்டுப்பாட்டில் அமைய வேண்டும். மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு வேண்டப்பெறும் தொடர்பும், ஒருங்கிணைப்பும் மாவட்ட நிலை அலுவலர்களுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நீர்வள ஆதார நிறுவனத்தைச் சேர்ந்த நிலத்தடி நீர்க் கோட்டம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆகியவற்றின் அலுவலர்களுடனும் மாவட்ட ஊராட்சியின் தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்படுவனவாகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாவட்ட ஊராட்சிகளுக்குத் தொழில்நுட்ப அறிவுரை அமைப்பாகச் செயற்படும்.

03. மாநில அரசால் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள ஒப்பிய பொறுப்புகளை அறிந்துள்ள நிலையில், மாநில திட்டக் குழுவானது, சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் குடிநீர் வசதிகள் வழங்கப்படவேண்டும் என்றும், குடிநீர் ஆதாரங்கள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்ட வேண்டும் என்றும், பயனாளர் கட்டணம் செலுத்தும் திட்டங்கள் பயன் அளிக்கத் தக்க வகையிலும், சிக்கன முறையிலும், பயனுறுதி விளைக்கத் தக்க முறையிலும் அமைக்கப்படவேண்டும் என்றும் மாநிலத் திட்டகுழு கருதுகின்றது. அதன் அடிப்படையில்,மாநில திட்டகுழுவானது ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளுக்கு பின்வரும் செயற்பாடுகளை (activities) ஒதுக்கப்பட பரிந்துரைக்கின்றது.

## I. ஊராட்சி

| வ. எண். | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கும் வசதி மேம்பாடு | (1) | கிணறுகள், தொட்டிகள் அமைத்தல் மற்றும் தன்னுடைய மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றம் மாவட்ட ஒப்படைக்கப்பெறும் ஊராட்சிக் ஊராட்சி மற்றும் அரசால் குடிநீர்த் திட்டங்களை மேற்கொள்ளல். |
| | | (2) | ஊராட்சி ஒன்றியங்களை ஈடுபடுத்தி குடிநீர்த் திட்டங்களையும் அமைவிடங்களையும் கண்டறிதல், திட்ட மதிப்பீடு தயாரித்தல், திட்டங்களை உருவாக்குதல். |
| | | (3) | திறந்த வெளிக் கிணறுகளில் காலமுறை தோறும் குளோரின் இட்டுச் சுத்தம் செய்தல், ஊரிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் முறையாகத் தண்ணீர் வழங்குவதனை உறுதி செய்தல். |
| 2. | ஊராட்சித் குடிநீர்த் திட்டங்களைக் கண்காணித்தல் | (1) | திட்ட முன்னேற்றம் குறித்து அறிக்கை அளித்தலும்; திட்டச் செயலாக்கத்தைக் கண்காணித்தலும். |
| 3. | குடிநீர்த் திட்டங்ளைப் பராமரித்தல். | (1) | குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தலும் இறைப்பான் இயக்குபவர்கள் போன்றவர்களைப் பராமரிப்புப் பணிக்காக அமர்த்துதலும். |

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 4. | குடிநீர்த் கட்டணம் வசூலித்தல் | (1) | குடிநீர்த் திட்டங்கள் ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகளால் இயக்கி பராமாக்கப்பட்டு வந்தாலும், பயன், சிக்கனம் ஆகியவற்றினைக் கருதி குடிநீர்க் கட்டணங்கள் ஊராட்சிகளிடமே ஒப்படைக்கலாம். விகிதாச்சாரக் குடிநீர்க் கட்டணத் தொகையை ஊராட்சிகள் காலமுறைதோறும் அத்திட்டங்களை இயக்கி, பராமரிக்கும் நிறுவனத்திற்குச் செலுத்தலாம். |

## II. ஊராட்சி ஒன்றியங்கள்

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கும் வசதி மேம்பாடு | (1) | குடிநீர்த் திட்டங்களுக்கான ஊர்களின் திட்டங்களுக்குரிய அமைவிடங்கள் , நீராதாரங்கள் ஆகியவற்றைக் கண்டறிதலும் முன்னுரிமை அடிப்படையில் முடிவு செய்தலும். |
| | | (2) | திட்டங்களை உருவாக்குதல் அவற்றுக்கு தொழில்நுட்ப நிர்வாக நிதி ஏற்பினை உரிய அதிகாரகளிடமிருந்து பெறுதல். |
| | | (3) | ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்கான திட்டங்களை (கூட்டிணைவு குடிநீர் வழங்கு திட்டம்) உரிய தொழில் நுட்பக் கூட்டுடன் செயல்படுத்துதல். |
| | | (4) | நீர்மாதிரிகளைச் (Samples) எடுத்தலும், பரிசோதித்தலும், கூட்டிணைவான குடிநீர் திட்டங்களுக்கும், ஊராட்சிக்களுக்கும் தண்ணீர் சுத்திகரிப்புக்கான பொருட்களை வழங்குதல். |
| 2. | ஊரகக் குடிநீர்த் திட்டங்களைக் கண்காணித்தல். | 1) | பணிகளின் முன்னேற்றம், தரத்தினை மேற்பார்வையிடலும், கண்காணித்தலும். |
| 3. | குடிநீர் அமைப்புகளைப் பராமரித்தல். | 1) | திட்டங்களைப் பராமரித்தல், ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி களுக்கான திட்டங்களின் குடிநீர்க் கட்டணத்தை ஊராட்சிகள் மூலமாக வசூலித்தல். |

## III. மாவட்ட ஊராட்சி

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கு வசதி மேம்பாடு மற்றும் கண்காணித்தல் | 1) | ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங் களுக்கான பெரிய குடிநீர்த் திட்டங் களைத் கண்டறிதலும், உருவாக்குதலும். |
| | | 2) | முழுமையான குடிநீர்த் திட்டங்களைக் கண்கானித்தல். |

### நிர்வாக, தொழில் நுட்பச் சிக்கல்கள்

04. இதுவரையில், குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தி பராமரிக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கே உரிய தனிப் பொறுப்பாக இருந்து வந்தது. மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகள் செயற்படத் தொடங்கியுள்ள நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நேரடிப் பொறுப்பானது ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குரிய திட்டங்களுக்கு மட்டும் என வரையறுக்கப்பட்ட வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரக, நகரக உள்ளாட்சிகளுக்கான ஏதேனும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தொழிற்சாலைப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டங்கள், மாவட்டங்களுக்கிடையேயான பெரிய குடிநீர்த் திட்டங்கள் ஆகியவற்றைப் பராமரிக்கலாம். மாவட்ட நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஆழ் குழாய்க் கிணறு அமைக்கத் தேவையான ஆழ்துணைக்கருவி, புவியியல் தொழில்நுட்பக் கருவிக் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இக்கருவிகள் தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமே இருக்கும். ஊராட்சிகள் தங்களுடைய குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளும்போது இக்கருவிகளைபயன்படுத்தலாம். இவ்வாறு, பிற திட்டங்கள், ஊராட்சி அமைப்புகளின் நிருவாகத்தின் கீழ் இருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட அதிகார, பொறுப்பு மாற்றங்களுடன், மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் நிலையில் நிருவாகத் தொடர்புகள் பெரிதும் வேண்டப் பெறுகின்றன. குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிதல், திட்ட உருவாக்குதல், திட்ட செயற்பாடு ஆகியவற்றில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொழில்நுட்பத் திறமைகளைக் கொண்டுள்ளது. மாவட்ட ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியங்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில்நுட்பத் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குடிநீர் ஆதாரங்கள், கையிறைப்பான்கள், மின் இறைப்பான்கள் ஆகியவற்றின் பராமரிப்பினைப் பொறுத்தவரை ஊராட்சிகளின் பணியாளர்கள் நல்லமுறையில் அவற்றைப் பராமரிக்க இயலும். முழுமையான குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்து, தற்போது திட்டங்களை மேற்பார்வையிடும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்கள், ஒன்றியங்களுக்கு / ஒப்படைப்பு செய்யப் பெறலாம் / மாற்றுப் பணியில் அனுப்பப் பெறலாம். ஊராட்சி அமைப்புகள், திட்டங்களைப் பராமரிப்பதற்காக பணிமாற்றல் / மாற்றுப்பணி அடிப்படையில் அனுப்பப்பெற்ற தொழில்நுட்பப் பணியாளர்களை நிருவகிக்கக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தொழில்நுட்பப் பிரிவில் உள்ள பணியாளர்கள் மாவட்ட அளவில் சீராக இணைவான தன்மையில் ஆணைகளை ஏற்றுத் தற்போது தொழில்நுட்பப் பிரிவு நிறைவேற்றிவரும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்ற மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றப்படவேண்டும்.

### நிதிச்சிக்கல்கள்

05. மாநில அரசு, வரவு செலவு திட்டத்தின் கோரிக்கை எண்.27 (ஊரக மேம்பாடு) கோரிக்கை எண்.48 (குடிநீர் வழங்கல்) ஆகியவற்றின்கீழ் நிதியினை வழங்குகின்றது. இந்த நிதி, ஊரக குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஊராட்சி அமைப்புகளுக்கோ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கோ வழங்கப்பட்டு வருகின்றது. அரசின் திட்டம் சாரா பணிகள், திட்டம் சார்ந்த பணிகள், மைய அரசின் ஆதரவிலான 100% மானியத் திட்டங்கள், மைய அரசின் ஆதரவுடன் மைய மாநில அரசுக்கிடையே மானியத்தைப் பகிர்ந்துகொள்ளும் திட்டங்கள் ஆகியவற்றின் வாயிலாக நிதி உதவி கிடைக்கப் பெறுகிறது. கீழ்க்காணும் அட்டவணை, நீராதாரங்களை உருவாக்கல், குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தல் ஆகியவற்றுக்கு 1994–95, 1995–96ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டங்களின் படியும் 1996–97–ம் ஆண்டுக்கான திருத்திய வரவு–செலவு திட்டத்தின் படியும் அமைந்த செலவினங்களைக் குறிப்பிடுவதாகும்.

| | 1994-95 | 1995-96 | 1996-97 |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| கோரிக்கை எண்.27 ஊரக மேம்பாடு | 829.74 | 862.18 | 885.02 |
| கோரிக்கை எண்.48 குடிநீர் வழங்கல் | 7880.70 | 7735.57 | 14054.15 |
| மொத்தம் | 8710.44 | 8600.75 | 14939.17 |

இவற்றையன்றி பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டப் பணி ஒன்றை (Decentralised District Planning Schemes) அரசு நடைமுறைப் படுத்துகின்றது. இதன்கீழ் குடிநீர்த் திட்டப் பணிகள் முன்னுரிமை ஒதுக்கீடுகளைப் பெறுகின்றன. இங்கே குறிப்பிட்டுள்ள செலவினங்களில் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அவற்றின் சொந்த நிதியிலிருந்து செலவழிந்த தொகை அடங்காததாகும். குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு "பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டப் பணிகளின்கீழ் ஒப்பளிக்கப்பெற்ற தொகைகள் வருமாறு:

| வரிசை எண். | ஆண்டு | ஊரகக் குடிநீர்க் திட்டங்களுக்கு ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | மொத்த ஒதுக்கீட்டில் சதவீதம் |
|---|---|---|---|
| 1. | 1993–94 | 224.28 | 11.21 |
| 2. | 1994–95 | 730.62 | 18.62 |
| 3. | 1995–96 | 1180.37 | 23.45 |
| 4. | 1996–97 | ★ | ★ |

★ மாவட்டங்களிலிருந்து நிதி ஒதுக்கீடு விவரங்கள் பெறப்பட வேண்டும்.

## கோரிக்கை எண். 27 (ஊரக மேம்பாடு)

| வரிசை எண். | கணக்குச் தலைப்பு | 1994-95 கணக்குகள் | 1995-96ன் திருத்திய மதிப்பீடு | 1996-97ன் திருத்திய மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| ஊரகக் குடிநீர்த் திட்டம் | | | | |
| 1. | ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக செயலாக்கப்படும் குடிநீர்த் திட்டங்கள் (மானிய உதவி) | 99.92 | 100.00 | 100.00 |
| 2. | கையிறைப்பான்கள், மின் இறைப்பான்களைப் பராமரிக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதியுதவி. | 167.28 | 197.67 | 220.51 |
| 3. | கையிறைப்பான்கள் பராமரிப்பு | 317.48 | 319.07 | 319.07 |
| 4. | மின் இறைப்பான்கள் பராமரிப்பு | 245.06 | 245.44 | 245.44 |
| | **மொத்தம்** | **829.74** | **862.18** | **885.02** |

## கோரிக்கை எண்.48
## ( குடிநீர் வழங்கல்)

| வரிசை எண். | கணக்குத் தலைப்பு | 1994-95 கணக்குகள் | 1995-96 திருத்திய மதிப்பீடு | 1996-97ன் திருத்திய மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | ஊரகக் குடிநீர்த் திட்டம் | | | |
| **I.** | **திட்டம் சாராதவை :** | | | |
| 1. | ஊரகக் குடிநீர் வழங்கல், ஆழ் குழாய் கிணறுகள் மின் இறைப்பான்களைப் பராமரிப்பு தற்குரிய நிருவாகப் பணியாளர்கள் (நெடுஞ்சாலை ஊரகப்பணி) | 4.82 | 5.44 | 5.59 |
| 2. | எட்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் | | | |
| **II.** | **மாநில அரசுப் பணிகள்** | | | |
| | அ. குறைந்தபட்சத் தேவைத் திட்டம் | 2500.00 | 2500.00 | 2650.00 |
| | ஆ. சிறப்புத் ஆக்கத் திட்டத்தின் கீழ்க் குறைந்தபட்த் தேவைத் திட்டம் (ஊரகக் குடிநீர்த் திட்டம்) | 820.00 | 820.00 | 850.00 |
| 3. | எட்டாவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் : | | | |
| **III.** | **மைய அரசு நிதியுதவி பெற்றது.** | | | |
| | அ. விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டம் (மானிய உதவி) | 2913.00 | 10.00 | 0.01 |
| | ஆ. சிறப்புத் துணைத் திட்டத்தின கீழ் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டம் (மானிய உதவி) | 971.00 | – | – |
| 4. | மாநில மத்திய அரசுகள் பகிர்ந்து கொள்ளும் திட்டங்கள் : | | | |
| | அ. அதிக அளவு ஃபுளூரைடால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான முழுமையான குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் (மானிய உதவி) | | 3359.84 | 2298.54 |
| | ஆ. குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் உவர்நீரால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு உவர்ப்பை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டுபடுத்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் | – | 640.16 | 0.01 |
| 5. | பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பிற நிறுவனங்களுக்கும் உதவி | | | |
| | 1. திட்டம் சாரா பணிகள் | | | |
| | அ. முழுமையான குடிநீர்த் திட்டங்களைப் பராமரிக்க த.கு.வ.வாரியத்திற்கு மானியம் (மானிய உதவி) | – | – | 1500.00 |
| | எட்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் :– | | | |
| | 11. மாநில அரசுப் பணிகள் : | | | |
| | ஆ. முழுமையான குடிநீர்த் திட்டங்களைத் சீர்படுத்த த.கு.வ.வாரியத்திகு மானிய உதவி | – | – | 1250.00 |
| | இ. ஊராட்சிகளின் குறைந்தபட்சத் தேவைத் திட்டத்திற்காக மின் இறைப்பான்களை மேம்படுத்த த.கு.வ. வாரித்திற்கு மானியம் (மானிய உதவி) | – | – | 3000.00 |
| | 6. மாநில மைய அரசுகள் பகிர்ந்து கொள்ளும் திட்டங்கள் | | | |
| | அ. விரைவுப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் திட்டத்தன் கீழ் உவர்நீரை நன்னீராக்கும் அமைப்புகளை நிறுவ த.கு.வ.வாரியத்திற்கு உதவி (மானிய உதவி) | 671.00 | 403.14 | 2500.00 |
| | **மொத்தம்** | **7880.00** | **7738.57** | **14054.15** |

ஆதாரம்: தமிழ்நாடு அரசின் வரவு–செலவு ஆவணங்கள் (1996–97)

06. மேற்காணும் அட்டவனைகளிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான குடிநீர்த் திட்டங்கள் ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் துறைகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதனை அறியலாம். குடிநீர்த் திட்டங்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன. அ. ஊராட்சி அமைப்புகளால் செயற்படுத்தக்கூடிய திட்டங்கள். ஆ. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தொடர்ந்து செயல்படுத்தத் கூடிய திட்டங்கள். இந்த வகைப்படுத்துவதில், எல்லாவகையான குடிநீர்த் திட்டங்களுக்கும் நிதி அளிக்கும் முறையினையும், திட்ட முன்னேற்றம் பற்றி பல்வேறு அதிகாரிகளுக்கு அறிக்கை அளிப்பதையும் எளிமைப்படுத்துகிறது.

07. அனைத்து குடியிருப்புகளுக்கும் தேவையான முழுமையான அளவு (ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர்) குடிநீர் வழங்குவது என்பதே மாநில அரசின் முன்னுரிமைப் பணியாகும். 1992ம் ஆண்டு மேற்கொள்ளப் பெற்ற கணக்கெடுப்பின் அடிப்படையில், 1996ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் நிலவரப்படி, மொத்தமுள்ள 66,631 குடியிருப்புகளில், 33.764 குடியிருப்புகள் முழுமையாக (ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் அல்லது அதற்கு மேலும்) குடிநீர் வசதி பெற்றவை என்று அரசுக்கு மதிப்பீடு செய்துள்ளது. எஞ்சிய குடியிருப்புகளில் 154 குடியிருப்புகளில் 1 கி.மீ. தொலைவுக்குள் குடிநீர் ஆதாரம் இல்லை. 12,615 குடியிருப்புகளில் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1 முதல் 10 லிட்டர் வரையிலான குடிநீர் வசதி உள்ளது. 20,098 குடியிருப்புகளில் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 10 முதல் 40 லிட்டர் வரையிலான குடிநீர் வசதி உள்ளது என்றும் மதிப்பீடப் பெற்றுள்ளது. எனவே மாநில அரசு, ஊராட்சி அமைப்புகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் கீழ்காணும் முன்னுரிமை அடிப்படையில் நிதியினை ஒதுக்கீடு செய்ய முடியும்.

| முன்னுரிமை அடிப்படை | | குடிநீர் வசதி அளிக்கப்படவேண்டிய குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நீர் ஆதாரம் இல்லாதவை | 154 |
| 2. | 1 முதல் 10 லிட்டர் வரை (ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு) | 12,615 |
| 3. | 11 முதல் 40 லிட்டர் வரை (ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு) | 20,098 |

மேற்கண்ட முன்னுரிமை அடிப்படையில் ஊராட்சிகளை வகைப்படுத்தலானது குடிநீர்த் திட்டங்களை உருவாக்க நிதி ஒதுக்கீடு அளிப்பதில் பின்பற்றத்தக்க கொள்கையாக அமைவதாகும்.

08. மாநிலத்தில் 1,07,493 ஆழ்குழாய்க் கையிறைப்பான்களும், 36,541 வடிமுனைக் ( Filter Point) கையிறைப்பான்களும், 29,445 மின் இறைப்பான்களும் உள்ளன. இவ்வாதாரங்களைப் பராமரிப்பது, புதிய ஆதாரங்களை உருவாக்குவது போன்று முக்கியமானதாகும். குடிநீர்த் திட்டங்களைப் பராமரிக்க அமையும் செலவினம் உள்ளபடியாக அரசின் செலவில் முதல் செலவாக இருத்தல் வேண்டும். மாநில நிதி ஆணையம் இத்தொடர்பில் கருதி தனது பரிந்துரையை வழங்கியிருக்கும் என்று மாநில திட்டக்குழு நம்புகிறது. இருப்பினும் இந்த ஆதாரங்களுக்கான பராமரிப்புச் செலவினம் முற்றிலுமாக மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மாநிலத் திட்டக்குழு பரிந்துரை செய்கிறது.

09. எதிர்காலங்களில் மூன்று அடுக்கு நிலையான ஊராட்சி அமைப்புகளில் நிதி நடவடிக்கைகள் மிகப் பெரிய அளவில் உயரும். சரியாக நிதி சரிபார்ப்புக்கு ஊராட்சி அமைப்பின் அனைத்துப் பணிகளும் தொடர்ச்சியான உடனிகழ் தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எனவே, உள்ளாட்சி நிதித் தணிக்கைப் பிரிவை வலுப்படுத்த வேண்டுவது தேவையாகும்.

### சட்டச் சிக்கல்கள்

10. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சட்டம் 1970, சென்னை பெருநகர் நீங்கலான பிற ஊரக நகரப் பகுதிகளில் குடிநீர், வடிகால் வசதிகளை முறைப்படுத்தவும், மேம்படுத்தவும் வகைசெய்கின்றது. இச்சட்டம் ஊரக பகுதிகளில் குடிநீர்த் திட்டங்கள் தொடர்பான ஆய்வு திட்டமிடல், செயல்படுத்தல் பராமரிப்பு ஆகியவற்றில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குமிடையே வேண்டப்படும் சட்டத் தொடர்புகளை அளிக்கின்றது. இருப்பினும் இச்சட்டத்திற்கு சிறு திருத்தங்கள் வேண்டப் பெறுகின்றன.

(1) மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 2 (7) இல் பொருள் விளக்கம் செய்யப்பட்டவாறு உள்ளாட்சி என்பதில் மாவட்ட ஊராட்சியும் அடங்கும் விதத்தில் திருத்தம் செய்ய வேண்டும். (2) மேலும் பிரிவு 2 (7) (iii) இல் "

தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1958 " என்பதற்கு பதிலாக தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994 என அமையும் வகையில் திருத்த வேண்டும். (3) தொழில் நுட்ப பொருளில் அடிப்படையில் நடைமுறைபடுத்தத் தக்க குடிநீர்த் திட்டங்களை தெளிவு செய்து செயற்படுத்தும் உரிமை ஊராட்சி அமைப்புகளுக்கு அமையும் வகையில் பிரிவு (27) நீக்கப்படவேண்டும். (4) உள்ளாட்சி அமைப்புகள் நடைமுறைப்படுத்த கூடிய குடிநீர்த் திட்டங்களைக் கண்டறிதல், ஆய்வு செய்தல், திட்டமிடல், செயற்படுத்தல் ஆகியவற்றில் உரிய உரிமைபெறும் வகையில் இயல் vi இன்பிரிவு 18 முதல் 26 வரை பொருத்தமான முறையில் திருத்தப்படவேண்டும். (5) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரக நகரப் பகுதிகளிலமைந்த உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களை செயற்படுத்தவதால், இவ்வுள்ளாட்சி அமைப்புகளில் சார்பாளர்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால்–வாரிய அமைப்பில் உறுப்பினர் பதவி நிலை அளிக்கப்படவேண்டும். இதன்படி வாரியத் சட்டத்தின் பிரிவு–4இல் மாவட்ட ஊராட்சியைச் சார்ந்த 2 தலைவர்களையும், ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 5 தலைவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய இயக்குநர் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாக அமையலாம். தமிழ் அகரவரிசைப்படி அவர்கள் சுழற்சி முறையில் தேர்வு செய்ய பெறலாம்.

11. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958, ஊராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க முன்னரே வகை செய்துள்ளது. தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994–இல் (சட்டம் 21, 1994) திருத்தம் வேண்டப்பெறும் சில காப்புரைகள் உள்ளன. (1) பிரிவு 110 (எ) இல் குடிநீரை ஒரு செயல்நோக்கமாகச் சேர்த்திடவேண்டும். (2) பிரிவு 111, 115 ஆகியவற்றின் காப்புரைகளை நீக்கிட வேண்டும். இது ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர்த் திட்டங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள உறுதுணைபுரியும்.

12. தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரிய சட்டம் தமிழ்நாடு உள்ளாட்சி சட்டம் ஆகியவற்றில் திருத்தம் மேற்கொள்ள அளிக்கப்பட்டுள்ள மேற்காணும் கருத்துரை இச்சட்டங்களில் தற்போதுள்ள முரண்பாடுகளைச் சரிசெய்யும்.